www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com

10ஆம் வகுப்பு

# காலாண்டுப் பொதுத்தேர்வு –செப்டம்பர்–2019

**(வினாத்தாள் விடைகளுடன்)**

**சமூக அறிவியல்**

நேரம் : 15 நிமிட + 2.30 மணி] [மொத்த மதிப்பெண்கள்: 100

அறிவுரைகள்: 1. அனைத்து வினாக்களுக்கும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் மட்டுமே பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு: இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

## பகுதி - I [மதிப்பெண்கள் : 14]

குறிப்பு: 1) இப்பகுதியில் உள்ள அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

(14 × 1 = 14)

**1. ஜூட்லேண்டு போரில் வெற்றி பெற்ற நாடு**

அ) ஜெர்மனி ஆ) இங்கிலாந்து

இ) ரஷ்யா ஈ) பிரான்ஸ்

**2. கூற்று** : குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.

**காரணம்** : அவர் 1941 இல் கடன் குத்தகை திட்டத்தை தொடங்கினார்.

அ) கூற்றும் காரணமும் சரி

ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை

ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை

**3. சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்:**

i) ராஜாராம் மோகன்ராய் ஒரு கடவுள் கோட்பாட்டை போதித்தார்.

ii) அவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார்

iii) சமூக தீமைகளை கண்டனம் செய்து எதிர்த்து அவர் சிற்றேடுகளை வெளியிட்டார்.

iv) ராஜாராம் மோகன்ராய் கவர்னர் வில்லியம் பெண்டிங்கால் ஆதரிக்கப்பட்டார்.

அ) i) சரி ஆ) i), ii) ஆகியன சரி

இ) i), ii), iii) ஆகியன சரி

ஈ) i), iii), iv) ஆகியன சரி

**4. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?**

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா

இ) போப் ஈ) ஸ்பெயின்

**5. எந்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் பொதுவுடைமைக் கொள்கையை கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கைவரைவை முன்வைத்தார்?**

அ) உட்ரோ வில்சன்

ஆ) ட்ரூமன்

இ) தியோடர் ரூஸ்வெல்ட்

ஈ) பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்

**6. இந்தியாவின் மிகப்பழமையான மடிப்பு மலைத்தொடர்**

அ) இமயமலை

ஆ) மேற்கு தொடர்ச்சி மலை

இ) ஆரவல்லி மலை

ஈ) விந்திய மலை

**7. கூற்று** : பருவக்காற்றுகள் எளிதில் புரிந்து கொள்ள இயலாத வானிலை நிகழ்வாகும்.

**காரணம்** : வானிலை வல்லுநர்கள் பருவக்காற்றின் தோற்றத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களை கூறியுள்ளனர்.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி காரணம் தவறு

ஈ) கூற்று தவறு காரணம் சரி

**8. இந்தியாவில் அதிகம் நெல் விளையும் மாநிலம்**

அ) பஞ்சாப் ஆ) மகாராஷ்டிரம்

இ) உத்திரபிரதேசம் ஈ) மேற்குவங்காளம்

**9. சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது**

அ) போக்குவரத்து

ஆ) கனிமப் படிவுகள்

இ) பெரும் தேவை

ஈ) மின்சக்தி கிடைப்பது

**10. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்**

அ) 5846 கி.மீ ஆ) 5847 கி.மீ

இ) 5849 கி.மீ ஈ) 5800 கி.மீ



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**11. அரசியலமைப்புக் கொள்கை முதன் முதலில் தோன்றிய இடம்**

அ) இந்தியா ஆ) இங்கிலாந்து

இ) அமெரிக்கா ஐக்கிய நாடுகள்

ஈ) ஜப்பான்

**12. மாநில ஆளுநரை நியமிப்பவர்**

அ) பிரதமர் ஆ) முதலமைச்சர்

இ) குடியரசுத்தலைவர் ஈ) தலைமை நீதிபதி

**13. தலா வருமானம் என்பது**

அ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை

ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி / மக்கள் தொகை

இ) நிகர நாட்டு உற்பத்தி / மக்கள் தொகை

ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி / மக்கள் தொகை

**14. இந்திய அரசாங்கம் 1991 இல் அறிமுகப்படுத்தியது**

அ) உலகமயமாக்கல்

ஆ) உலக வர்த்தக அமைப்பு

இ) புதிய பொருளாதாரக் கொள்கை

ஈ) இவற்றுள் எதுவுமில்லை

## பகுதி - II [மதிப்பெண்கள் : 20]

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 28-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்:** 10 × 2 = 20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. மன்றோ கோட்பாட்டை விளக்குக.
17. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
18. சுவாமி தயானந்த சரஸ்வதி முன்வைத்த நேர்மறையான கொள்கைகள் யாவை?
19. தக்காணபீடபூமி – குறிப்பு வரைக.
20. 'வானிலையியல்' வரையறு.
21. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.
22. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.'
23. செம்மொழி தகுதி பெற்றுள்ள மொழிகளைப் பட்டியலிடுக.
24. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன?
25. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினை பட்டியலிடுக.
26. நாட்டு வருமானம் – வரையறு.
27. பன்னாட்டு நிறுவனங்களின் ஏதேனும் இரு பயன்களைக் குறிப்பிடுக.
28. உலகின் பிரதான போக்குவரத்து வகைகள் யாவை?

## பகுதி - III [மதிப்பெண்கள் : 50]

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 42-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்:** 10 × 5 = 50

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

i) நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை _____ என அழைக்கப்பட்டது.

ii) இந்தியாவின் காலநிலை _____ ஆக பெயரிடப்பட்டுள்ளது.

iii) இந்தியாவின் மின்னியல் தலைநகரம் _____ ஆகும்.

iv) _____ இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும்.

v) உலக வர்த்தக ஒப்பந்தம் _____ ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது.

**30. பொருத்துக**

| | | |
|---|---|---|
| i) | ஹிண்டன்பர்க் | - மாநில நெருக்கடி நிலை |
| ii) | பிளிட்ஸ்கிரிக் | - ஜெர்மனி |
| iii) | டாக்டர் சன் யாட் சென் | - 1955 |
| iv) | குடியுரிமைச் சட்டம் | - மின்னல் வேகத்தாக்குதல் |
| v) | சட்டப்பிரிவு 356 | - கோமிங்டாங் |

**31. பொருத்துக**

| | | |
|---|---|---|
| i) | சாங்போ | - அக்டோபர்-டிசம்பர் |
| ii) | வடகிழக்குப் பருவக்காற்று | - 1947 |
| iii) | இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | - பிரம்மபுத்ரா |
| iv) | சுங்கவரி வாணிபம் குறித்த பொது உடன்பாடு | - பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி |
| v) | GST | - உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் |

**32. அ) வேறுபடுத்துக:**

(i) வானிலை மற்றும் காலநிலை

(ii) புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்

**ஆ) காரணம் கூறுக:** மழைநீர் சேகரிப்பு அவசியம்

33. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.
34. பிரம்மஞான இயக்கம் பற்றியும் அன்னிபெசன்டின் பங்களிப்பு பற்றியும் ஒரு கட்டுரை வரைக.
35. ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
36. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக.
37. அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
38. ஆளுநரின் சட்டமன்ற அதிகாரங்களை விவரி.
39. பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைக் கூறுக.
40. நியாயமான வர்த்தக அமைப்பின் கோட்பாடுகளைச் சுட்டிக் காட்டுக.

**41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:**
1910 முதல் 1930 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

**42. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்:**

i) பிரான்சு ii) இத்தாலி

iii) இங்கிலாந்து iv) ஜப்பான்

v) சீனா

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



## பகுதி - IV [மதிப்பெண்கள் : 16]

**இரு வினாக்களுக்கும் விடையளிக்க.** 2 × 8 = 16

**43.** அ) **பால்கன் போர்கள்**

i) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?

ii) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?

iii) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?

iv) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?

ஆ) **அணிசேரா இயக்கம்**

i) அணிசேரா இயக்கத்தின் முதல் மாநாடு எங்கே எப்போது நடைபெற்றது?

ii) முதல் மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியப் பிரமுகர்கள் யாவர்?

iii) அணிசேரா இயக்கத்தின் குறிக்கோள்கள் என்ன?

iv) அணிசேரா இயக்கத்தின் பெல்கிரேட் மாநாட்டில் கொண்டுவரப்பட்ட இரு அடிப்படைக் கொள்கைகளைக் கூறுக. **(அல்லது)**

இ) **ஹோ சி மின்**

i) ஹோ சி மின் எங்கே பிறந்தார்?

ii) ஹோ சி மின் எவ்வாறு நன்கறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதியானார்?

iii) ஹோ சி மினின் புரட்சிகர இளைஞர் இயக்கம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?

iv) வியட்நாம் விடுதலைச்சங்கம் இந்தோ–சீனாவில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

ஈ) **ராஜா ராம்மோகன் ராய்**

i) ராஜா ராம்மோகன் ராய் எச்சமூக மரபுகளை எதிர்த்தார்?

ii) அவர் எக்கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தார்?

iii) ராஜா ராம் மோகன் ராய் எந்த முறையைக் கண்டனம் செய்தார்

iv) சதி ஒழிப்புச்சட்டம் எப்போது இயற்றப்பட்டது?

**44. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனற்றை குறிக்கவும்:**

i) நர்மதை ஆறு

ii) மேற்கு தொடர்ச்சி மலை

iii) பன்னா உயிர்க்கோள பெட்டகம்

iv) அதிக மழைபெறும் பகுதிகளுள் ஒன்று

v) சணல் விளையும் பகுதி

vi) ஏதேனும் ஒரு பன்னாட்டு விமான நிலையம்

vii) சோட்டா நாகபுரி பீடபூமி.

viii) அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் **(அல்லது)**

**கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்:**

i) தமிழ்நாட்டில் அமைந்துள்ள அணுமின் நிலையம்

ii) சோழமண்டல கடற்கரை

iii) பக்ரா நங்கல் அணை

iv) கிர் தேசிய பூங்கா

v) கங்கை நதி

vi) மலைக்காடுகள்

vii) வண்டல் மண் அதிகம் காணப்படும் பகுதி

viii) கன்னியாகுமரி

★ ★ ★

## விடைகள் :

### பகுதி - I

**1.** (ஆ) இங்கிலாந்து

**2.** (அ) கூற்றும் காரணமும் சரி.

**3.** (ஈ) i), iii) iv) ஆகியன சரி

**4.** (இ) போப்

**5.** (ஆ) ட்ரூமன்

**6.** (இ) ஆரவல்லி மலை

**7.** (அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

**8.** (ஈ) மேற்கு வங்காளம்

**9.** (ஆ) கனிமப் படிவுகள்

**10.** (அ) 5846 கி.மீ

**11.** (இ) அமெரிக்கா ஐக்கிய நாடுகள்

**12.** (இ) குடியரசுத்தலைவர்

**13.** (அ) நாட்டு வருமானம் / மக்கள் தொகை

**14.** (இ) புதிய பொருளாதாரக் கொள்கை

### பகுதி - II

**15.** இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா

**16.** i) அமெரிக்கக் குடியரசுத் தலைவர் மன்றோ தனது புகழ்பெற்ற மன்றோ கோட்பாட்டை முன் வைத்தார்.

ii) அமெரிக்காவின் எந்த பகுதியிலும் அது வடக்கோ தெற்கோ ஐரோப்பியர்கள் தலையீட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கெதிரான போராக கருதப்படும் என அறிவித்தது.

iii) இப்பயமுறுத்தல் ஐரோப்பியர்களை அச்சங்கொள்ள வைத்து அவர்களை தென்அமெரிக்கா விவகாரங்களிலிருந்து விலகியிருக்கச் செய்தது.

**17.** 'பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள்' என குறிக்கப்படும் உலக வங்கி பன்னாட்டு நிதி அமைப்பு ஆகிய இரண்டும் 1944 ல் நடைபெற்ற பிரட்டன் உட்ஸ் மாநாட்டிற்குப் பின் 1945 ல் நிறுவப்பட்டன.

**18.** சுவாமி தயானந்த சரஸ்வதி முன்வைத்த நேர்மறையான கொள்கைகள், கட்டுப்பாடான ஒரு கடவுள் வழிபாடு, உருவ வழிபாட்டை நிராகரித்தல், பிராமணர் மேலாதிக்கம் செலுத்தும் சடங்குகள் சமூக நடைமுறைகள் ஆகியவற்றை மறுத்தல் என்பனவாகும்.

**19. தக்காண பீடபூமி :**

i) தக்காண பீடபூமி தீபகற்ப பீடபூமியின் அமைந்துள்ள மிகப் பெரிய இயற்கை அமைப்பைக் கொண்டதாகும். இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது.

ii) வடமேற்கு திசையில் விந்திய சாத்பூரா மலைத் தொடர்களையும் வடக்கில் மகாதேவ், மைக்காலா, குன்றுகளையும் வடகிழக்கில் இராஜ்மகால் குன்றுகளையும் மேற்கில் மேற்கு தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்கு தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாகக் கொண்டது.

iii) சுமார் 7 லட்சம் சதுர கி.மீ. பரப்பளவையும் கடல் மட்டத்திலிருந்து 500 மீ முதல் 1000மீ உயரம் வரையும் அமைந்துள்ளது.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com


**20.** **வானிலையியல் :** வானிலையின் பல்வேறு கூறுகளைப் பற்றி குறிப்பாக வானிலை முன்னறிவிப்பு பற்றிய ஒரு அறிவியல் பிரிவு வானிலையியல் எனப்படும்.

**21.** i) காரி ஃப் பருவம்
ii) ராபி பருவம்
iii) சையத் பருவம்.

**22.** **இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகள்:** மேற்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள், மும்பை ஹை எண்ணெய் வயல். குஜராத் கடற்கரை (2வது பெரியது), அங்கலேஸ்வர், காம்பே, அகமதாபாத், கிழக்கு கடற்கரைக்கு அருகில் உள்ள எண்ணெய் வயல்கள், பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கு, திக்பாய் எண்ணெய் வயல், நாகர்பட்டியா எண்ணெய் வயல், ருத்ரசாகர், சர்மா பள்ளத்தாக்கு, அந்தமான் நிக்கோபாரின் உட்பகுதிகள், மன்னார் வளைகுடா, பலேஷ்வர் கடற்கரை.

**23.** 6 மொழிகள் செம்மொழி தகுதியை பெற்றுள்ளன. அவை தமிழ் (2004), சமஸ்கிருதம் (2005), தெலுங்கு (2008), கன்னடம் (2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா (2014).

**24.** **ஆளுநரின் தகுதிகள் :** ஆளுநர் பதவிக்கு தேவையான தகுதிகள் பின்வருவன.
i) அவர் இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்.
ii) அவர் 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
iii) அவர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது சட்டமன்ற உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. அவ்வாறு இருப்பின் அவர் ஆளுநராக பதவியேற்கும் பொழுது தாமாகவே அப்பதவி காலியாகிவிடும்.
iv) அவர் இலாபந்தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது.

**25.** i) இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் பார்வையிடும் உரிமை இவருக்கு உண்டு.
ii) பாராளுமன்ற இரு அவைகளின் செயல்முறைகளிலும் பேசுவதற்கும் பங்கு கொள்ளுவதற்கும் இவருக்கு உரிமை உண்டு.

**26.** i) நாட்டு வருமானம் என்பது ஓர் நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
ii) பொதுவாக நாட்டு வருமானத்தை மொத்த நாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

**27.** i) பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது.
ii) நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.

**28.** உலகின் பிரதான 3 போக்குவரத்து வகைகள்
i) நிலம் : சாலை வழி, இரயில்வே, குழாய் வழி
ii) நீர் : உள்நாட்டு நீர்வழி, கடல்வழி
iii) வான்வெளி : உள்நாட்டு வான்வெளி, பன்னாட்டு வான்வெளி

## பகுதி - III

**29.** i) கெஸ்ட்போ
ii) அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை
iii) பெங்களூரு
iv) உச்ச நீதிமன்றம் v) ஜனவரி 1 1995

**30.** i) ஹிண்டன்பர்க் - ஜெர்மனி
ii) பிளிட்ஸ்கிரிக் - மின்னல் வேகத்தாக்குதல்
iii) டாக்டர் சன் யாட் சென்- கோமிங்டாங்
iv) குடியுரிமைச் சட்டம் - 1955
v) சட்டப்பிரிவு 356 - மாநில நெருக்கடி நிலை

**31.** i) சாங்போ - பிரம்மபுத்ரா
ii) வடகிழக்குப் பருவக்காற்று - அக்டோபர்-டிசம்பர்
iii) இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் - உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார்
iv) சுங்கவரி வாணிபம் குறித்த பொது உடன்பாடு - 1947
v) GST - பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி

**32.** அ) (i)

| | வானிலை | காலநிலை |
|---|---|---|
| 1. | வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிப்பதாகும். | காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30-35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும். |
| 2. | வெப்பம், மழைப்பொழிவு, ஈரப்பதம், காற்று, அழுத்தம் ஆகியவை ஒரு இடத்தின் வானிலையை நிர்ணயிக்கும் காரணிகள் ஆகும். | அட்சம் பரவல், கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, கடல் மட்டத்திலிருந்து உயரம், பருவக்காற்று, நிலத்தோற்றம் போன்றவை காலநிலையை பாதிக்கும் காரணிகள் ஆகும். |

ii)

| | புதுப்பிக்க இயலும் வளங்கள் | புதுப்பிக்க இயலா வளங்கள் |
|---|---|---|
| 1. | புதுப்பிக்கக் கூடிய வளம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய வளங்கள். | புதுப்பிக்க இயலாத வளம் ஒருமுறை பயன்படுத்தினால் மீண்டும் புதுப்பிக்க இயலாது. |
| 2. | சூரிய ஆற்றல், காற்று சக்தி, உயிர் வளிமம், ஓதசக்தி, அலை சக்தி போன்றவை புதுப்பிக்கக்கூடிய வளங்கள் ஆகும். | நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு போன்றவை புதுப்பிக்க இயலா வளங்கள் ஆகும். |

ஆ) இந்தியா வெப்பமண்டல பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளது. இக்காலநிலை பருவக் காலங்களில் சீரற்ற, நிலையற்ற மழைப் பொழிவை தருகிறது. இதனால் பெரும்பாலான நேரங்களில் மழைநீர் குறைவாகவே கிடைக்கிறது. எனவே கிடைக்கும் மழைநீரை சேமிப்பது மிகவும் அவசியமாகிறது.

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



**33. ஐக்கிய நாடுகள்:**

i) ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம் ஆகும். இதன் தலைமைச்செயலாளர், பொதுச் சபையில், பாதுகாப்பு சபையின் பரிந்துரையின்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். தலைமைச் செயலாளர் தனது காபினெட் உறுப்பினர்கள், ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் துணையோடு ஐக்கிய நாடுகள் சபையை நடத்துகிறார். பன்னாட்டு நீதிமன்றம் ஐக்கிய நாடுகள் சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும்.

ii) இது ஹாலந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது.

iii) பொருளாதார சமூக மாமன்றம் (Economic and Social Council - ECOSOC) ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்தாவது அங்கமாகும். ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் அனைத்து பொருளாதார சமூக பணிகளை ஒருங்கிணைப்பது இவ்வமைப்பின் பணியாகும்.

iv) உலகின் பல்வேறு பகுதிகளில் பிராந்தியங்களின் வளர்ச்சிக்காக (ஆசியா, பசிபிக், மேற்கு ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிக்கா, லத்தீன், அமெரிக்கா) பல பிராந்திய பொருளாதார ஆணையங்கள் செயல்படுகின்றன.

v) அவை பொருளாதார சமூக மாமன்றத்தின் (ECOSOC) துணையமைப்புகளாகும். மிக வெற்றிகரமாக செயல்படும் அவை பொருளாதார வல்லுநரான குன்னார் மிர்தால் போன்றோரின் தலைமையில் செயல்படுகின்றன.

**ஐ.நா. வின் செயல்பாடுகள் :**

i) கடந்த பல பத்தாண்டுகளில் உலகம், எதிர்கொண்ட மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐக்கிய நாடுகள் சபை தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது. 1960களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும். மனித உரிமைகள், அகதிகள், பிரச்சனை, பருவகால மாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன.

ii) ஐ.நாவின் அமைதிப்படை, உலகம் முழுவதிலும் மோதல்கள் அரங்கேறியப் பல்வேறு பகுதிகளில் அப்படை பணி செய்துள்ளது. அமைதிப்படையின் முக்கியப் பகுதியாக உள்ள இந்திய ராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

**34.** i) பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துசமயமும் பண்பாடும், குறிப்பாகக் கிறித்தவ சமயப்பரப்பு நிறுவனங்களின் பரப்புரைகளால் ஐரோப்பாவில் இழிவுபடுத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

ii) இச்சந்தர்ப்பத்தில் ஒருசில மேலைநாட்டு அறிவுஜீவிகள் பொருள் சார்ந்த மேலை உலக வாழ்க்கைக்குத் தீர்வாக ஆன்மீக முக்திக்காகக் கிழக்கை எதிர்நோக்கினர்.

iii) இதில் மேடம் H.P. பிளாவட்ஸ்கி (1831–1891) மற்றும் கர்னல் H.S. ஆல்காட் (1832–1907) ஆகியோரால் நிறுவப்பெற்ற பிரம்மஞானசபை முக்கியப் பங்குவகித்தது. 1875இல் அமெரிக்கா வில் நிறுவப்பட்ட இவ்வமைப்புப் பின்னர் 1886இல் இந்தியாவில் சென்னை அடையாறுக்கு மாற்றப்பட்டது.

iv) பிரம்ம ஞானசபை இந்து செவ்வியல் நூல்களைக் குறிப்பாக உபநிடதங்கள், பகவத்கீதை ஆகியவற்றைப் படிப்பதற்கு உற்சாக மூட்டியது.

v) இந்தியாவில் பௌத்தம் புத்துயிர் பெறுவதில் பிரம்மஞானசபை முக்கியப் பங்காற்றியது.

vi) இந்து மறை நூல்களின் மீது மேலைநாட்டவர் காட்டிய ஆர்வம், படித்த இந்தியர்களிடையே தங்கள் பாரம்பரியம், பண்பாடு குறித்த அளப்பரிய பெருமிதத்தை ஏற்படுத்தியது.

**Dr.அன்னிபெசன்டின் பங்களிப்பு**

i) 1907இல் ஆல்காட்டின் மறைவுக்குப் பின்னர் இவ்வமைப்பின் தலைவராக அன்னிபெசன்ட் (1847–1933) தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, இவ்வியக்கம் மேலும் செல்வாக்குப் பெற்றது.

ii) இந்திய தேசிய அரசியலில் முக்கியத்துவம் பெற்ற அவர் தன்னாட்சி இயக்கச்சங்கத்தை அமைத்து அயர்லாந்திற்கு வழங்கப்பட்டதைப் போல இந்தியாவிற்கும் தன்னாட்சி வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்.

iii) அன்னிபெசன்ட் பிரம்மஞானக் கருத்துக்களை தன்னுடைய நியூ இந்தியா, காமன்வீல் எனும் செய்தித்தாள்களின் மூலம் பரப்பினார்.

**35. பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம் :** இது ஒரு அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மை திட்டமாகும். ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகளைக் கட்டுவதால் இவை பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் என்று அழைக்கப்படுகிறது. நீர்ப்பாசனம், நீர்மின் உற்பத்தி, குடிநீர் மற்றும் தொழிற்சாலைக்கு நீர் வழங்குதல், வெள்ளத்தடுப்பு, மீன்வள மேம்பாடு, நீர் வழிப் போக்குவரத்து போன்றவை இதன் பல்வேறு நோக்கங்களாகும். நீர் மின் சக்தி மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவை பெரும்பாலான பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

**தாமோதர் பள்ளத்தாக்கு திட்டம் :**

i) மேற்கு வங்காளம் மற்றும் ஜார்கண்ட் மாநிலத்தில் பாசன வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் மின்சார உருவாக்கத்தின் ஒன்றுபட்ட வளர்ச்சிக்கு இந்த திட்டம் கருதப்படுகிறது.

ii) இந்தத் திட்டம் 1948–இல் தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பரேஷன் மூலம் நிறுவப்பட்டது.

iii) பாசன வசதித் திட்டம் 5.51 லட்சம் ஹெக்டரில் நிறுவப்பட்டுள்ளது மற்றும் அதன் நிறுவப்பட்ட மின் உற்பத்தி 1181 மெகாவாட் ஆகும்.

iv) இது ஐக்கிய அமெரிக்காவின் டென்னிஸ் பள்ளத்தாக்கு அதிகார அமைப்பின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பக்ரா நங்கல் திட்டம் :**

i) பஞ்சாப் ஹரியானா, ராஜஸ்தான் இவைகளின் ஒரு கூட்டு முயற்சி.

ii) இந்தியாவின் மிகப்பெரிய பல்நோக்கு நதி பள்ளத்தாக்கு திட்டம் இதுவரை ₹236 கோடி செலவில் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது.

iii) இது 518 மீட்டர் நீளம் மற்றும் 226 மீட்டர் உயரம் சட்லெஜ் – க்குக் குறுக்காக பக்ராவில் ஒரு நேரான ஈர்ப்பு அணையைக் கொண்டுள்ளது.

iv) பக்ரா அணையின் கொள்ளளவு தண்ணீர் 986.8 கோடி கன மீட்டர்.

v) திட்டத்தின் கால்வாய் அமைப்பு, இப்போது 14.8 லட்சம் ஹெக்டேருக்குப் பாசனம் செய்கிறது.

**36.** கிராமப்புற சமுதாயம் நகர்புற சமுதாயமாக மாற்றமடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.

**நகரமயமாக்களின் தாக்கங்கள் :**

i) நகரமயமாக்களும் மக்கள்தொகை அடர்த்தியும்

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. நகர்புறமயமாக்களின் விரைவான வளர்ச்சியானது சமூக – பொருளாதார அபிவிருத்தியின் அடையாளமாக கருதப்படுகிறது.

ii) இந்தியா போன்ற வளரும் நாடுகளில் நகர்புறமயமாக்கம் விரைவாக அதிகரித்து வருகிறது. கிராமத்திலிருந்து நகரங்களுக்கு இடப்பெயர்ச்சி நகர் பகுதிகளில் மக்கள் தொகை வெடிப்பிற்கு வழி வகுக்கிறது.

iii) மும்பை, கொல்கத்தா, புதுடெல்லி போன்ற பெருநகரங்கள் தங்கள் கொள்ளளவைவிட அதிகமான மக்கள் தொகையுடன் காணப்படுகின்றன.

**இந்தியாவில் நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள் :**

i) நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
ii) நகர்புறங்களில் மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.
iii) நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
iv) குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.
v) போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
vi) குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.
vii) வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
viii) திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்குகிறது.
ix) குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன.

**37.**

| | அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|---|
| 1. | இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப் பிலிருந்து பெறப்பட்டது. | இது அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது. |
| 2. | அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தலே ஆகும். |
| 3. | இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது. |
| 4. | இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| 5. | இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகிறது. | இந்த கொள்கைகளை செயற்படுத்தும் பொழுது சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது. |
| 6. | இவை இயற்கையான உரிமைகள் | இவை மனித உரிமைகளைப் பாதுகாக்க வழி வகுக்கிறது. |

**38. சட்டமன்ற அதிகாரங்கள் :** ஆளுநர் மாநில சட்டமன்றத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாவார். ஆனால் அவர், சட்டமன்றத்தின் உறுப்பினர் இல்லை. ஆளுநர், பின்வரும் சட்டமன்ற அதிகாரங்களையும், பணிகளையும் பெற்றுள்ளார்.

i) ஆளுநர் சட்டமன்ற கூட்டத்தைக் கூட்டவும், சட்டமன்றத்தை கலைக்கவும் உரிமை பெற்றுள்ளார் .
ii) பொதுத் தேர்தல் முடிந்து, முதலமைச்சர் மற்றும் மற்ற அமைச்சர்களின் நியமனத்திற்குப் பிறகு நடைபெறும் சட்டமன்றக் கூட்டத்தின் முதல் கூட்டத்தில் உரை நிகழ்த்துகிறார்.
iii) நிலுவையிலுள்ள மசோதா குறித்து, சட்டமன்ற அவைகளுக்கு ஆளுநர் செய்தி அனுப்பலாம்.
iv) சபாநாயகர், மற்றும் துணை சபாநாயகர் பணியிடம் காலியாக இருக்கும்பொழுது, சட்டமன்றத்தை தலைமை ஏற்று நடத்த ஆளுநர் யாரை வேண்டுமானாலும் நியமனம் செய்யலாம்.
v) ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஓர் உறுப்பினரை மாநில சட்டமன்றத்திற்கு நியமனம் செய்யலாம்.
vi) கலை, இலக்கியம், அறிவியல், கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்றவற்றில் சிறந்து விளங்கும் நபர்களைத் தேர்ந்தெடுத்து, மாநில சட்டமேலவையின் 6ல் 1 பங்கு இடங்களுக்கு அவர்களை நியமனம் செய்கிறார்.
vii) சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்கிறார்.
viii) மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு மசோதாவும், ஆளுநர் கையொப்பம் இட்டால் மட்டுமே சட்டமாகும்.
ix) மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட, எந்த ஒரு மசோதாவையும், மாநில உயர்நீதிமன்றத்திற்கு தீங்கு விளைவிக்கும் நிலையில் இருமாயின் அதனை, குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக நிறுத்திவைக்கலாம்.
x) அரசியலமைப்பு சட்டம் பிரிவு 213ன் கீழ், ஆளுநர், மாநில சட்டமன்றம் நடைபெறாத பொழுது அவசர நிலைப்பிறப்பிக்கலாம்.

**39.** பொருளாதார வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள்

| | ஒப்பீடு | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1. | வரையறை / பொருள் | ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருளாதாரத்தில் வெளியீட்டில் இது நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும். | இது பொருளாதாரத்தில் வெளியீட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, HDIயின் குறியீட்டின் முன்னேற்றம் வாழ்க்கைத்தரத்தில் உயர்வு, தொழில் நுட்ப முன்னேற்றம், மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் கருதுகிறது. |
| 2. | கருத்து | பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து. | பொருளாதார முன்னேற்றம் ஒரு 'பரந்த கருத்து'. |
| 3. | அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு. | தரத்தின் இயல்பு. |




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com
www.surabooks.com


| | ஒப்பீடு | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|---|---|
| 4. | நோக்கம் | GDP, GNP, FDI, FII, போன்ற அளவுகள் அதிகரிக்கும். | வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை எழுத்தறிவு விகிதம் மற்றும் வறுமை விகிதத்தில் முன்னேற்றம். |
| 5. | கால வரம்பு | இயற்கையில் குறுகிய காலத்தை உடையது. | இயற்கையில் நீண்ட காலத்தை உடையது. |
| 6. | பொருந்தும் தன்மை | வளர்ந்த நாடுகள். | வளர்ந்து வருகின்ற நாடுகள். |
| 7. | அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல். | உண்மையான நாட்டு வருமானத்தை அதிகரித்தல், அதாவது, தனிநபர் வருமானம் போன்றவை. |
| 8. | நிகழ்வின் அதிர்வெண் | ஒரு குறிப்பிட்ட காலம். | தொடர்ச்சியான செயல்முறை |

**40.** i) பொருளாதார ரீதியில் பின்தங்கிய உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
ii) வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு.
iii) நியாயமான வர்த்தக/ நடைமுறைகள் மற்றும் நியாயமான விலையில் கொடுப்பது.
iv) குழந்தை தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.
v) பாகுபாடு அல்லாத , பாலின சமபங்கு மற்றும் சங்க சுதந்திரம் ஆகியவற்றுக்கு அர்ப்பணித்தல்.
vi) திறனை வளர்த்தல் மற்றும் நியாயமான அமைப்பினை மேம்படுத்துதல்.
vii) சுற்றுசூழலுக்கு மதிப்பளித்தல்

**41.** காலக்கோடு (1920 - 1930)




அளவுக்கோல்
(1 அலகு = 5 வருடங்கள்)

**42.**





Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

www.surabooks.com



## பகுதி - IV

**43.** அ) i) மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் கிரீஸ், செர்பியா, பல்கேரியா பின்னர், மாண்ட் நீக்ரோ ஆகிய நாடுகள் இடையே போட்டிகள் நிலவின. 1912 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவை பால்கன் கழகம் என்ற அமைப்பை உருவாக்கின.

ii) 1. பால்கன் கழகம் முதல் பால்கன் போரில் (1912 - 1913) துருக்கிய படைகளைத் தோற்கடித்தன.

2. 1913 ஆம் ஆண்டு மே மாதம் லண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது. மாசிடோனியாவை ஏனைய பால்கன் நாடுகள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன.

3. துருக்கி, கான்ஸ்டாண்டிநோபிளைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டும் கொண்ட அரசாகச் சுருக்கப்பட்டது.

iii) துருக்கியப் படைகள்.

iv) 1913 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் கையெழுத்திடப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையோடு இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது.

**ஆ)** i) 1961 – ல் பெல்கிரேடில் கூடியது.

ii) டிட்டோ (யுகோஸ்லோவியா) நாசர் (எகிப்து), நேரு (இந்தியா), நுக்ருமா (கானா), சுகர்ணோ (இந்தோனேசியா).

iii) புதிதாக அரசியல் சுதந்திரம் பெற்ற ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் 1955-ம் ஆண்டு பாண்டுங்கில் (இந்தோனேசியா) கூடி இரு வல்லரசு அணிகளிலும் சேரக்கூடாது என்பதை தீவிரமாக வலியுறுத்தின. மேலும் அவை காலனிய ஆதிக்கமும் ஏகாதிபத்தியமும் எவ்வடிவம் எடுத்தாலும் அதை எதிர்த்து நிற்பது என்ற முடிவு செய்தன.

iv) அமைதியோடு இணைந்திருத்தல், அமைதியையும் பாதுகாப்பையும் முன்னிறுத்தப் பாடுபடல், எந்த அணியோடும் இராணுவக் கூட்டுறவுக் கொள்ளாமல் இருத்தல், எந்த வல்லரசுக்கும் தத்தம் நாட்டிற்குள் இராணுவ நிலைகள் ஏற்படுத்த அமைதி வழங்காமல் இருத்தல் போன்றவையே ஆகும். **(அல்லது)**

**இ)** i) ஹோ சி மின் 1890 இல் டோங்கிங்கில் பிறந்தார்.

ii) பாரிஸ் அமைதி மாநாட்டில் வியட்நாம் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார். தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக 'விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்' எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது.

iii) ஹோ சி மின் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார். 1925 இல் 'புரட்சிகர இளைஞர் இயக்கம்' எனும் அமைப்பை நிறுவினார்.

iv) வியட்நாம் விடுதலைச் சங்கம் இந்தோ – சீனாவில் வியட்மின் என்று அழைக்கப்பட்டது.


**ஈ)** i) பொருளற்ற சமயச்சடங்குகளையும், கேடுகளை விளைவிக்கும் சமூகமரபுகளையும் எதிர்த்தார்.

ii) தன்னுடைய சமய, தத்துவ சமூகப்பார்வையில் அவர் ஒருகடவுள் கோட்பாடு, உருவவழிபாடு எதிர்ப்பு போன்ற கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தார்.


iii) ராஜாராம் மோகன்ராய் பெண்ணடிமைத்தனத்தைக் கண்டனம் செய்தார் .

iv) சதி ஒழிப்புச்சட்டம் 1829இல் இயற்றப்பட்டது.

**44.**




**(அல்லது)**




★★★

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com